

# உங்கள் உரிமைகளை தெரிந்து கொள்ளுங்கள்

நாஸ் ஃபவுன்டேஷன் இன்டர்நேஷனல் 2003

# உங்கள் உரிமைகளை தெரிந்து கொள்ளுங்கள்

## நீங்கள் எம்.எஸ்.எம்மா?

## உங்கள் உரிமைகள் என்னவென்று தெரியுமா?

இந்தியாவில் 2 ஆண்கள் செக்ஸ் வைத்துக் கொள்வது குற்றமென தெரியுமா அப்படியென இந்திய குற்றவியல் சட்டம் 377 சொல்கிறது, இயற்கைக்கு புறம்பான உடலுறவு வைத்துக் கொண்டால் சிறை தண்டனை என்கிறது. இயற்கைக்கு புறம்பான என்றால் என்ன என விளக்கம் தரப்படுவதில்லை. நீதிமன்றங்கள் வாய்வழி ஆசனவாய் புணர்ச்சியை இயற்கைக்கு புறம்பானது என்கின்றன. இந்த சட்டம் செல்லுபடியாகுமா? இது அமுலாகிறதா?

1860ல் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆங்கிலேய சோடமி சட்டத்தையொட்டி இது இயற்றப்பட்டது. இங்கிலாந்தில் இதற்கெதிரான சட்டங்கள் இல்லையென ஆகிவிட்டது. இந்தியாவில் மட்டும் அமுலில் உள்ளது. இந்தியாவில் ஓரினச் சேர்க்கை பற்றி புரிதல் அதிகரித்துள்ள சூழலில் இதை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக வந்துள்ளது. அதையே இந்திய சட்ட கமிஷனும் பரிந்துரை செய்துள்ளது. எம்.எஸ்.எம். உள்ளிட்ட அனைவரின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது இந்த சட்டம்.

இச்சட்டம் எப்போதாவது அமுலாக்கப்படுகிறது. எம்.எஸ்.எம்களை துன்புறுத்த பணம் பிடுங்குவதற்கு சாதகமாக போலீஸ் இதை பயன்படுத்துகிறது. நீங்கள் செல்லும் இடங்களில் ரெய்டுகள் நடத்தப்பட்டு துன்புறுத்துவதை நீங்கள் அறிவீர்கள். இந்த சட்டம் அமுலில் இருக்கும் வரை எம்.எஸ்.எம்கள் மத்தியில் எச்.ஐ.வி எய்ட்ஸ் பிரச்சனையில் சிறப்பாக தலையிட முடியாது. எம்.எஸ்எம்களுக்கு ஆணுறை வழங்குவது பாதுகாப்பான செக்சில் ஈடுபடுத்துவது. இந்த குற்றத்திற்கு துணைபோவதாக கருதப்படும். எம்.எஸ்எம்களின் மனித மற்றும் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும். அவற்றை பாதுகாக்கவோ முன்னெடுத்து சொல்லவோ இயலாது.

உயர்நீதிமன்றம் உச்ச நீதிமன்றமும் இச்சட்டம் செல்லாது என அறிவிக்கலாம். இது வரை அப்படிப்பட்ட தீர்ப்பு வழங்கப்படவில்லை. புதுதில்லி உயர்நீதி மன்றத்தில் இதை எதிர்த்து தற்போது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ஆனால்

## அப்படியெனில் உங்களுக்கு எந்த உரிமைகளும் இல்லையென்று அர்த்தமா?

இல்லை உங்களுக்கென்று உள்ள சில உரிமைகளை சட்டம் பறிக்க முடியாது. இவை அடிப்படை உரிமைகள் அரசியல் சாசனம் அளித்த உரிமைகள். அனைத்து குடிமக்களின் அடிப்படை உரிமைகளாகும். அடிப்படை உரிமைகளில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில உரிமைகள்.

சமத்துவ உரிமை (14 பிரிவு) எம்.எஸ்எம். அல்லது மற்றவர் என அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். சட்டபாதுகாப்பு அனைவருக்கும் உண்டு. அரசு (போலீஸ் உள்ளிட்ட அரசு ஏஜென்சிகள் இதிலடங்கும்) பாரபட்சமாக நடந்து கொள்ளக்கூடாது எம்.எஸ்எம்.கள் பாரம்பரியமாக பாரபட்சத்தை சந்தித்து வருகின்றனர்.

## பலவகை உரிமைகள் (பிரிவு 19) இந்த பிரிவின் பலவித சுதந்திரம் தரப்படுகிறது.

**பேச்சு, கருத்து சுதந்திரம்** : நீங்கள் ஒரு கோத்தியாக இருந்து. பெண்ணைப் போல உடை அணிந்து மேக்-அப் போட்டுக் கொள்ள விரும்பினால் அதற்கு சுதந்திரம் உண்டு. யாரும் அதற்காக உங்களை துன்புறுத்த முடியாது அப்படி துன்புறுத்தினால் போலீஸ் பாதுகாப்பு கேட்கலாம். போலீசே துன்புறுத்தினால் அவர்களுக்கெதிராக புகார் கொடுத்து கோர்ட்டுக்கு செல்லலாம். எந்த பயமும் இன்றி உங்கள் கருத்துக்களை சொல்ல உரிமை உண்டு.

## ஆயுதங்களின்றி அமைதியாக கூடுவதற்கு சுதந்திரம்

எம்.எஸ்.எம்க்கள் பொது இடங்களில் கூடலாம். அடுத்தவர்கள் முகம் சுளிக்காத வண்ணம் பிரச்சனை ஏற்படுத்தாமல் பேசலாம். படிக்கலாம். கூட்டங்கள் நடத்தலாம். தடை உத்தரவு இல்லாத சமயங்களில் கூட்டம் போட்டால் போலீஸ் இலக்கு வைத்து துன்புறுத்த இயலாது.

## சங்கம் அமைக்க சுதந்திரம்

ஆதரவு குழுக்கள் மற்றும் NGO அமைக்க சுதந்திரம் உண்டு. இக்குழுக்களில் சட்டவிரோதமான நடவடிக்கை நடக்காமலிருந்தால் அரசு போலீஸ் தலையீட்டிலிருந்து காப்பாற்ற முடியும்.

## இந்தியாவிற்கு எங்கும் சுதந்திரமாக நடமாடமுடியும்

எந்த தடையுமின்றி இந்தியாவில் எந்த பகுதிக்கும் செல்ல முடியும். எனவே பூங்கா போன்ற சிறிய இடங்களில் எம்.எஸ்.எம்கள் கூடி பேசினால்

அதை தடுக்க முடியாது. எம்.எஸ்.எம். என்பதால் உங்களை யாரும் பொது இடங்களிலிருந்து அப்புறப்படுத்த முடியாது. ஆனால் பொது இடங்களில் செக்ஸ் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கைது செய்யலாம். விபாசார தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யலாம்.

## இந்தியாவின் எந்த பகுதியிலும் குடியேறும் உரிமை

உங்களுக்கு வீடு தர முடியாது என்பதற்கு சட்டத்தில் இடமில்லை. எம்.எஸ்.எம்.என்பதால் குடியிருப்பு பகுதியிலிருந்து உங்களை வெளியேற்ற முடியாது. அப்படி உங்களை தொந்தரவு செய்தால் போலீஸ் புகார் கொடுக்கலாம்.

## எந்த தொழில் பிசினஸ் செய்வதற்கும் சுதந்திரம்

எம்.எஸ்.எம்களுக்கு இது மிகவும் முக்கியமாது செக்ஸ் தொழிலில் ஈடுபட உரிமை உண்டு. இந்திய குற்றவியல் சட்டம் 377ன் படி வாய்வழி ஆசனவாய் புணர்ச்சி சட்டவிரோதமானது என்ற போதிலும் விபச்சார தடுப்புச்சட்டம் செக்ஸ் தொழிலை சட்ட விரோதமென கூறவில்லை. அரசு செக்ஸ் தொழிலில் ஆசனவாய் வாய்வழி புணர்ச்சி என நிருபித்தாலே அன்றி உங்களை செக்ஸ் தொழிலில் ஈடுபடுவதை யாரும் தடுக்க முடியாது.

## குறிப்பு

இந்த சுதந்திரம் என்பது வரையறைக்கு உட்பட்டது. பொது இடங்களில் ஒழுங்கு என அரசு தடைகளை விதிக்கலாம். ஆனால் இது வரை அம்மாதிரியான தடைகள் ஏதுமில்லாததால், மேலே கூறப்பட்ட சுதந்திரத்தை அனுபவிக்கலாம்.

## சட்டவிரோதமாக அளிக்கும் தண்டனையை எதிர்க்கும் உரிமை (பிரிவு 20(1))

குற்றம் என நிரூபிக்கப்படாத சூழலில் யாருக்கும் தண்டனை அளிக்க முடியாது. செக்ஷன் 377ன் கீழ் வாய்வழி ஆசனவாய் புணர்ச்சி குற்றமென்றாலும் அதை கோர்ட்டில் நிரூபித்தால் மட்டுமே தண்டனை அளிக்க முடியும். இதை நிரூபிப்பதும் கடினம்.

## உயிர், தனிமனித சுதந்திரத்தை பாதுகாக்கும் உரிமை (பிரிவு 21)

இது மிகவும் முக்கியமான அடிப்படை உரிமையாகும். உங்கள் உயிரை பறிப்பதற்கோ உங்கள் வாழ்க்கை தரத்தை பாதிக்கும் எந்த நடவடிக்கைகளிலும் அரசு ஈடுபடமுடியாது. உங்கள் கௌரவத்தை குலைக்க முடியாது.

சட்டவிரோதமாக இல்லாத வரை ஒரு எம்.எஸ்எம் இன் மகிழ்ச்சி என்பதை தடுக்க முடியாது. மேலும் செக்ஸ் குற்றத்திலிருந்து இந்த பிரிவு பாதுகாப்பு அளிக்கிறது. இது கோர்ட் தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இதுவரை அப்படிப்பட்ட தீர்ப்பு வரவில்லை.

## குறிப்பிட்ட வழக்குகளில் கைது செய்து அப்படியே வைப்பதிலிருந்து பாதுகாப்பு (பிரிவு 22)

இந்த பிரிவு மிகவும் முக்கியம் ஏனெனில் எம்.எஸ்.எம்.களை போலீஸ் பிடித்துக் கொண்டு போவது அதிகம். இந்த பிரிவின் படி கைது செய்யப்படும் நபரிடம் எதற்காக அவரை கைது செய்கின்றனர் என போலீஸ் விளக்கம் தர வேண்டும். உங்களை கைது செய்தால் 24 மணி நேரத்திற்குள் மாஜிஸ்ட்ரேட் முன்பு உங்களை ஆஜர்படுத்த வேண்டும். நீங்கள் விரும்பும் வக்கீலை உங்களுக்கு வாதாட அழைக்க உரிமை உண்டு.

## இந்த உரிமைகள் மட்டும் தானா உங்களுக்கு உள்ளன?

சிவில் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் உங்களுக்கு பல உரிமைகள் உள்ளன. சிவில் உரிமைகள் என்பவை சொத்தின் மீதான உரிமையை மறுக்க இயலாது. ஓட்டுபோடுதல் பொது போக்குவரத்து வசதிகளை பயன்படுத்துதல் சொத்து வாரிசு உரிமை பள்ளி கல்லூரி செல்லும் உரிமை திருமணம் செய்து கொள்வது குழந்தைகளை தத்தெடுத்துக் கொள்வது. (உங்கள் தனிநபர் சட்டம் அனுமதித்தால்) ஆகியவற்றை நீங்கள் எம்.எஸ்.எம். என்பதால் மறுக்க முடியாது உங்களுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் இச்சட்டத்தின் கீழ் நஷ்டஈடு கோரலாம்.

குற்றவியல் சட்டத்தின் மூலம் உடல் ரீதியான துன்புறுத்தலிருந்து பாதுகாப்பு பெறலாம். இங்கெ தான் துன்புறுத்தல் வன்முறை என்றால் என்ன? எப்படி குற்றம்? என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எம்.எஸ்.எம்மாக இருந்து கீழ்கண்ட சூழலை எதிர்கொண்டால்

- உடல் ரீதியான வன்முறைக்கு உட்படுத்தினால், மிரட்டினால்
- தவறாக உங்களை அடைத்து வைப்பது (உம். உங்களை பூட்டி வைப்பது) இதை உங்கள் குடும்பத்தினர் வேறு யாரேனும் செய்தால்
- பணம் பிடுங்குவதற்காக அல்லது வாக்குமூலம் பெறுவதற்காக உங்களை யாரேனும் துன்புறுத்தினால்.
- உங்களுக்கு பிடிக்காத போது வற்புறத்தி செக்ஸ் வைத்துக் கொண்டால்

- உங்களை காட்டிக் கொடுப்பதாக ப்ளாக்மெயில் அல்லது மிரட்டுதல்
- வேறு விதமாக உங்களை துன்புறுத்தினால்

உங்களை துன்புறத்துபவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து தண்டனை பெற்று தரலாம்.

நன்கு தெரிந்தே செய்யும் குற்றங்கள் அறியாமல் செய்யும் குற்றங்கள் யாவை? இவற்றில் எப்படி செயல்படுவது?

அறிந்தே செய்யக்கூடிய குற்றங்களை போலீஸ் விசாரணை நடத்தி, குற்றம் சாட்டப்பட்டது உண்மையெனில் நடவடிக்கை எடுக்கலாம். உங்கள் மீது அப்படி குற்றம் சாட்டப்பட்டிருந்தால் போலீஸ் எப்ஜஆர் (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்ய வேண்டு மாறு வலியுறுத்துங்கள் அப்படி எப்ஜ.ஆர். போட மறுத்தால் புகாரை எழுதி எஸ்பிக்கு பதிவு தபாலில் அனுப்பி விடவும். அதன்பின் அவர்களை நடவடிக்கை எடுக்க வற்புறுத்தலாம். உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம். அறியாமல் செய்யும் குற்றம் எனில் அதை விசாரிக்கும் முன்பு மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதி வேண்டும். கைது வாரண்ட் இருந்தால் தான் கைது செய்ய முடியும். இது போன்றவற்றில் போலீஸ் ஸ்டேஷனில் பதிவு செய்யலாம். ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் உங்களை மாஜிஸ்ட்ரேட்டிடம் அனுப்பி அனுமதி பெறும்படி கூறுவார். ஆனால் நீங்கள் மாஜிஸ்ட்ரேட்டை நீங்களாகவே சென்று சந்திப்பது நல்லது.

போலீஸ் உங்களை துன்புறுத்த எந்த அதிகாரமும் இல்லை. போலீஸ் சட்டத்தை மீற முடியாது. சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களும் அல்ல. பணம் பறிக்க துன்புறுத்தினால் அது தவறான நடத்தையாகும். அவர்களை அதற்காக பணி நீக்கம் செய்யலாம்.

## போலீஸ் உங்களை கைது செய்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

### உங்களுக்கு கீழ்கண்ட உரிமைகள் உள்ளன.

- கைதுக்கான காரணம் கேட்கும் உரிமை
- உங்கள் நண்பர் உறவினரிடம் கைதானது பற்றி எங்கு இருக்கிறீர்கள் என்ற தகவல் கொடுக்கும் உரிமை
- வக்கீலை கலந்தாலோசிக்கும் உரிமை
- வக்கீல் வைத்துக் கொள்ள வசதி இல்லை என்றால் இலவச சட்ட உதவி கேட்டுப் பெறலாம். மாஜீஸ்ரேட்டிடம் கூறி உதவி பெறும் உரிமை

- உங்களை விலங்கிடக்கூடாது. கைது செய்வதை எதிர்த்தால் உங்கள் மீது சிறிய பலம் பிரயோகிக்கப்படலாம்.

- கைதாகி 24 மணி நேரத்திற்குள் உங்களை மாஜிட்ரேட் முன்பு ஆஜர்படுத்த வேண்டும்.

- ஜாமீனில் வெளிவரும் குற்றமாக பதிவாகி இருந்தால் உங்களை ஜாமீனில் வெளியே விடவேண்டும்.

- ஜாமீனில் வெளியே வர இயலாதபடி பதிவாகி இருந்தாலும் ஜாமீன் கேட்டு விண்ணப்பிக்கும் உரிமை உள்ளது.

- உங்களை கைது செய்யும் போது காயம் ஏதும் இருந்ததா என டாக்டரை வைத்து பரிசோதனை செய்து அதை பதிவு செய்ய வேண்டும் என கோரும் உரிமை உண்டு.

- விசாரணை கைதியாக வைத்திருக்கும் போது 48 மணி நேரத்திற்கொரு முறை டாக்டரை கொண்டு பரிசோதனை செய்ய வேண்டும் என கோரலாம்.

- விசாரணையின் போது உங்கள் வக்கீல் உங்களுடன் இருக்கும் உரிமை

- உங்களுக்கெதிராக சாட்சி அளிக்கும் படி போலீஸ் உங்களை வற்புறுத்த முடியாது எனவே விசாரணையின் போது பதிலளிக்காமல் மௌனமாக இருக்கலாம்.

- நீங்கள் என்ன கூறினாலும் அது உங்களுக்கு எதிரான சாட்சியாக ஆகும் என்று கருத கூடாது என்பது முக்கியம்.

- போலீஸ் உங்கள் மீது மூன்றாம் தர நடவடிக்கைகளை பின்பற்றக் கூடாது.

## இவை நீங்கள் கைதானால் செய்ய வேண்டியவை :

வக்கீலின் டெலிபோன் நம்பர் அல்லது நம்பத்தகுந்த ஒரு நபரின் டெலிபோன் நம்பரை எப்போதும் வைத்திருங்கள் கைதானால் அவரை தொடர்பு கொள்ள வற்புறுத்துங்கள்.

- கைதாகும் அபாயம் இருந்தால் முன்ஜாமீன் எடுத்து விடுங்கள்.

- உங்களை கைது செய்ய வந்தால் அதை எதிர்க்காதீர்கள் அதற்கு பின் சட்ட உதவியை நாடுங்கள்

- போலீசாரிடம் உங்கள் உரிமைகளை பற்றி உங்களுக்கு தெரியும் என்று கூறுங்கள் அவர்களது செயல்பாடு சட்ட விரோதமானது என்றால் அதை தெரிவியுங்கள்

## எம்.எஸ்.எம் களுக்கு தெரிந்து கொள்ள வேண்டிய உரிமைகள்

## ஆம். உண்டு உங்களுடைய ஆரோக்கிய மற்றும் செக்ஸ் உரிமைகள் உண்டு

### ஆரோக்கிய உரிமைகள்

**உயிர்வாழும் உரிமை உங்களுக்கு அனுமதி இன்றி உங்கள் உடலை யாரும் துன்புறுத்த முடியாது.**

அனுமதி என்றால், டாக்டர் கூட அவராகவே எப்படி சிகிச்சை அளிப்பது என தீர்மானிக்க முடியாது, டாக்டர் குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைக்கு மோசமான பின் விளைவுகள் இருப்பின் அவற்றை பற்றி கூற வேண்டும். உங்களுக்கு கவுன்சிலிங் செய்யாமல் எச்.ஐ.வி. பரிசோதனை செய்யக் கூடாது. உங்கள் அனுமதி என்பது நீங்கள் சுயேச்சையாக எடுக்கும் முடிவாகும்.

உங்கள் விருப்பமின்றி பரிசோதனைக்கு உட்படுத்தினால் நீங்கள் சட்ட பூர்வமான அந்த டாக்டருக்கு மருத்துவ நிறுவனத்திற்கெதிராக நடவடிக்கை எடுக்கலாம்.

சிகிச்சை பெற்றாலும் நம்பகத்தன்மை காப்பாற்றப்பட வேண்டும். அதை மீறினாலும் சட்ட பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளலாம். நீங்கள் எச்.ஐ.வி(+) என்ற போதிலும் அதை வெளியே கூற பயந்து சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்காதீர்கள். மாற்று பெயரில் கூட வழக்கு பதிவு செய்யலாம் (இதற்கு அடையாளத்தை மறைப்பது என்பர்)

எம்.எஸ்.எம். என்பதால் எந்த பாரபட்சமும் காட்டாமல் சிகிச்சை பெறும் உரிமை உள்ளது. அரசு நடத்தும் மருத்துவமனை சிகிச்சையை மறுக்க முடியாது மறுத்தால் சட்டபூர்வ நடவடிக்கை எடுத்து நஷ்ட ஈடு கோர முடியும்.

**செக்ஸ் உரிமைகள்** : உங்கள் உடல் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். உங்களை யாரும் வற்புறுத்தி செக்ஸ் வைத்துக் கொள்ள முடியாது. பாதுகாப்பான செக்ஸை நீங்கள் விரும்பினால் பாதுகாப்பற்ற செக்ஸை திணிக்க முடியாது. அப்படி செய்தால் அது வன்முறையாக, குற்றமாக கருதப்படும் அவர் மீது நடவடிக்கை எடுத்து நஷ்ட ஈடு கோரமுடியும்.

உங்கள் உரிமைகள் மீறப்பட்டால் எம்.எஸ்.எம். ஏஜென்சிகள் உதவியை நாடலாம் அவர்கள் சட்ட உதவியும் அளிப்பார்கள் எனவே இந்த ஏஜென்சிகளுடன் தொடர்பு வைத்திருப்பது முக்கியம். உங்கள் உரிமைகளை நன்குதெரிந்து கொண்டு செயல்படவில்லையென்றால் அவை மீறப்படும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.